**தேர்ச்சி 8.0:-** வணிகங்களின் வாழ்தன்மைக்கு காப்புறுதியின் தேவைபாட்டினை உறுதி செய்வர்.

**தேர்ச்சி மட்டம் 8.1:-** வணிகங்களின் வாழ்தன்மைக்கு காரணமாய் அமையும் காப்புறுதி சேவையின் முக்கியத்துவத்தை கேட்டறிவர்.

(01). காப்புறுதி செய்பவரினால் தவணைக் கட்டணம் செலுத்துவதற்கு காப்புறுதி அபாயங்கள் காரணமாக காப்புறுதி செய்பவருக்கு ஏற்படக்கூடிய நட்டத்திற்கு காப்புறுத்துவோன் இழப்பீடு கொடுப்பதற்கு , காப்புறுதி செய்பவருக்கும் காப்புறுதி நிறுவனத்துக்கும் இடையே ஏற்படுத்திக்கொள்ளும் உடன்பாடு “காப்புறுதி” எனப்படும்.

I. வணிகங்களின் நீடித்த வாழ்வுக்கு காப்புறுதியின் முக்கியத்துவத்தை விபரிக்குக.
II. ஒரு நாட்டிற்கு அல்லது பொருளாதாரத்திற்கு காப்புறுதியின் முக்கியத்துவத்தை விபரிக்குக.
III. தனிநபர்களின் வாழ்வுக்கு காப்புறுதியின் பங்களிப்பு பற்றி குறிப்பிடுக.

(02). காப்புறுதியில் பண ரீதியாக அளவிடக்கூடிய இழப்பு ஒன்று ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் “இடர்” எனப்படும்.

I. வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் பல்வேறு முறைகள் யாவை?
II. காப்புறுத்தக் கூடிய இடர் , காப்புறுத்த முடியாத இடர் என்பதை விபரிக்குக.
III. காப்புறுதி செய்யக்கூடிய இடர் ஒன்றின் பண்புகளை வரிசைப்படுத்துக.
IV. காப்புறுதி செய்யக்கூடிய இடர்கான உதாரணங்கள் நான்கினை குறிப்பிடுக.
V. காப்புறுதி செய்ய முடியாது இடர்கான உதாரணங்கள் நான்கினை தருக.

(03). ஒருவரின் ஆயுளுக்கு அல்லது சொத்துக்கு காப்புறுதி ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்ட பின்னர் அதற்காக காப்புறுதி கம்பனியின் மூலம் காப்புறுதி செய்பவருக்கு வழங்கப்படும் சான்றிதழ் “காப்புறுதி ஒப்பந்தம்” எனப்படும்.

I. காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றுடன் தொடர்புபடும் பிரிவினர்கள் யாவர்?
II. காப்புறுதியில் கூறப்படும் மூன்று பிரிவினர்கள் யாவர்?
III. காப்புறுதி ஒப்பந்தம் ஒன்று கொண்டிருக்க வேண்டிய அம்சங்கள் யாவை?